

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஆகஸ்டு 30, 2018 | புரட்சி 17 | முழக்கம் 33 | விலை: ரூ.3.00


# பயண நிறைவு விழா மாநாடு பெரம்பலூரில் பேரெழுச்சி



திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கல்வி உரிமை மீட்புப் பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மாநாடு ஆகஸ்ட் 26 அன்று பெரம்பலூரில் எழுச்சியுடனும் உணர்ச்சியுடனும் நடைபெற்றது. பெரம்பலூர் புதிய பேருந்து நிலைய வளாகம் முழுதும் பல்லாயிரக்கணக்கில் பொது மக்களும் கருஞ்சட்டைத் தோழர்களும் கடல்போல் திரண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சி.

மாநாட்டுக்குப் பொறுப்பேற்று செயல்பட்ட பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரை.தாமோதரன் தலைமை யிலான செயல் வீரர்கள் மிகச் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நகரம் முழுதும் கழகக் கொடிகளும் மாநாட்டுக் கோரிக்கைகளை விளக்கும் பதாகைகளும் கம்பீரமாகக் காட்சி அளித்தன. மாநாட்டு மேடைக்கு ‘சமச்சீர் கல்வி நாயகன் கலைஞர் மேடை’ என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

மாலை 3 மணியிலிருந்தே 6 பயணக் குழுக்களும் பறை இசை ஒலி முழக்கங்களோடு பெரம்பலூர் நோக்கி வந்து நகரையே குலுக்கின. சென்னை பயணக்குழு தனது நிறைவு பரப்புரையை பெரம்பலூர் கூட் ரோடு சந்திப்பில் நிகழ்த்தியது.

மாலை 6 மணியளவில் பறை இசை நிகழ்ச்சிகளுடன் மாநாடு தொடங்கியது. குடியாத்தம் பயணக் குழுவின் கலைக் குழு பறை இசைகளை முழங்கியது. தொடர்ந்து சென்னை பயணக் குழுவில் பயணித்த ‘விரட்டு பண்பாட்டுக் கலைக் குழு’ கல்வி உரிமை பரப்புரைப் பயணத்தின் நோக்கங்களை விளக்கும் பாடல்கள் - வீதி நாடகங்கள் - உரைச் சித்திரங்களை நிகழ்த்திக் காட்டியபோது, கரவொலிகள் வெடித்துக் கிளம்பின. குடியாத்தம்-மேட்டூர் பயணக் குழுவில் கலை நிகழ்ச்சி நடத்திய தோழர்களும் இதில் இணைந்து கலை நிகழ்வுகளை நடத்தினர். மாநாட்டை நோக்கி கூட்டம் அணி அணியாக வந்து கொண்டிருந்தது. திரும்புமிடமெல்லாம் தலைகளாகத் தெரிந்தன. கலை நிகழ்வுகள் முடிந்தவுடனே திடீரென மழை கொட்டத் தொடங்கியது. 30 நிமிடம் மழை கொட்டித் தீர்த்தது. நிகழ்ச்சிகள் தற்காலிகமாக தடைபட்டன. மழைவிட்டவுடன் ஒலிபெருக்கி சாதனங்கள் பழுதான நிலையில் கழகச் செயல்வீரர்கள் உடனே சென்னை பரப்புரை வாகனத்தில் இருந்த ஒலிபெருக்கிக் கருவிகளை சில மணித் துளிகளில் மேடையில் பொருத்தினர். மேடைக்கு அருகே பரப்புரை வாகனம் நிறுத்தப்பட்டு ஒலிபெருக்கி மேடையில் நிறுவப்பட்டு நிகழ்ச்சிகள் மீண்டும் தொடங்கின. கடும் மழைக்குப் பிறகும் ஆங்காங்கே ஒதுங்கி நின்ற மக்கள் மீண்டும் நிகழ்ச்சிகளைக் கேட்க இருக்கையில் அமர்ந்து விட்டனர்.

திருச்சி மாவட்ட இணை ஒருங்கிணைப் பாளர் புதியவன் வரவேற்புரையைத் தொடர்ந்து, பயணக் குழு ஒருங்கிணைப் பாளர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இளையராஜா (மயிலாடுதுறை குழு), உமாபதி (சென்னை குழு), மடத்துக் குளம் மோகன் (திருப்பூர் குழு), நாத்திக ஜோதி (சங்கரன்கோயில் குழு), ஆர்.எஸ். சக்தி (மேட்டூர் குழு), பரத் (குடியாத்தம் குழு) ஆகியோர் பயணங்களில் கட்சிகளைக் கடந்து மக்கள் தந்த பேராதரவையும் குழுவினரிடம் நெகிழ்ச்சியோடு வெளிப்படுத்திய ஆதரவு, நிதி உதவிகளையும் பகிர்ந்து கொண்டபோது கூட்டத்தினர் உற்சாகமடைந்தனர்.

திருப்பூர் பயணக் குழுவில் பங்கேற்று பயணம் முழுதும் அறிவியல் பாடலைப் பாடி மக்களின் பேரன்பைப் பெற்ற பெரியார் பிஞ்சுகள் யாழிசை, யாழினி ஆகியோர் மேடையில் ‘கம்ப்யூட்டரில் ஜோசியம்’ என்ற பாடலைப் பாடி பாராட்டுகளைப் பெற்றனர்.

குமாரபாளையம் கழகத் தோழர் அண்ணாத்துரை -பனிமலர் இணையரின் அன்பு மகள் ஈழக்கனி மலர்

(4 ஆம் பக்கம்)

## “கல்வி, வேலை – நம் உரிமை; சுயமரியாதை – நம் அடையாளம்”

பயணக் குழுவில் இடம் பெற்றிருந்த தோழர்கள் அனைவரும் ஒரே சீருடை அணிந்திருந்தனர். கருப்பு ‘டி’ சட்டையில், சட்டைப் பை பகுதியில் பெரியார் படத்துடன் திராவிடர் விடுதலைக் கழகம் என்று அச்சிடப்பட்டிருந்தது. முதுகு புறத்தில் “கல்வி, வேலை – நம் உரிமை; சுயமரியாதை – நம் அடையாளம்” என்ற வாசகங்கள் அச்சிடப்பட்டிருந்தன. பரப்புரைப் பயணத்தின் நோக்கத்தை மக்களிடையே இது கொண்டு சென்றது.

பரப்புரை வாகனங்களில் ‘நீட்’ பாதிப்புகளையும் தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்களில் வடநாட்டார் குவிக்கப்படுவதையும் புள்ளி விவரங்கள் படங்களுடன் சிறப்பாக சித்தரிக்கப்பட்டிருந்தன.

## கழக வெளியீடுகளுக்கு மக்கள் பேராதரவு

பரப்புரைப் பயணத்துக்காக கழக சார்பில் வெளியிட்ட கல்வி, வேலை வாய்ப்பு, உரிமைகள் பறிப்பு, இடஒதுக்கீடு வரலாறு குறித்த நூல்களை பொது மக்கள் ஏராளமாக வாங்கிச் சென்றனர். நூல்களுக்கு மக்களிடையே பேராதரவு காணப்பட்டது. சென்னைப் பயணக் குழுவினர் எடுத்துச் சென்ற நூல்கள் எல்லாம் விற்பனையாகி விட்டன.

## திருப்பூர் பயணக் குழுவில் பெண்களே அதிகம்

திருப்பூரிலிருந்து புறப்பட்ட பயணக் குழுவில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக இடம் பெற்றிருந்தனர். பெண்களே கடைகடையாக துண்டறிக்கைகளை வழங்கி, உண்டியல் மூலம் நிதி சேகரித்தனர்; பரப்புரை செய்தனர்; பாடல்களைப் பாடினர். பெரியார் இயக்கத்தில் பெண்களும் ஆண்களும் தோழர்களாக இணைந்து வீதிகளில் களப்பணியாற்றியதைப் பொது மக்கள் வியந்து பாராட்டினர்.

# தஞ்சை மாவட்டத்தில் பார்ப்பன–பண்ணையார் ஆதிக்கம்–முடிவுக்கு வந்தது எப்படி?(2)

**பேராசிரியர் ஜெயரஞ்சன்**

***அ**சோகா பல்கலைக்கழகமும் (டெல்லி), அம்பேத்கர் பல்கலைக்கழகமும், திராவிடியனிஸம் என்ற தலைப்பில் சென்ற ஜனவரி மாதம் ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தார்கள். இந்தக் கருத்தரங்கம் திராவிட இயக்கம் தோன்றி ஒரு நூற்றாண்டு ஆனதையொட்டி ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. அக்கருத்தரங்கில் பேராசிரியர் ஜெயரஞ்சன் வாசித்த கட்டுரையின் சுருக்கம். (சென்ற இதழ் தொடர்ச்சி)*

நில உரிமையாளர் தனது நிலத்தை திரும்பக் கேட்டால் குத்தகைதாரர் மிகக் குறைவாக கேட்பது மூன்றில் ஒரு பகுதி நிலமோ அல்லது அதற்கு ஈடான பணமோ. நில உரிமையாளர் அதிகாரம் மிக்கவராக இருந்தால், மூன்றில் ஒரு பகுதி நிலத்தை வழங்கிவிட்டு மீதி நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். நில உரிமையாளரின் அதிகார பலம் குறையக் குறைய குத்தகைதாரரின் பங்கு கூடும். நில உரிமையாளர் உள்ளூர்க்காரராக இல்லாமலும் சாதி மற்றும் இதர பலம் இல்லாதவராக இருந்தால் ஒரு சென்ட் நிலம் கூட பெற முடியாது. ஆக, இந்தப் பேரத்தை தீர்மானிப்பது இவர்கள் இருவரது பலங்கள்தான். பதிவுபெற்ற குத்தகைதாரர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இருப்பது ஒருபுறம். பதிவு பெறாத குத்தகைதாரர்களும் இத்தகைய சமுதாய பாதுகாப்பைப் பெற்றுள்ளனர். சட்டம் அளிக்கும் பாதுகாப்பு என்பது குத்தகைதாரர்களின் வெளியேற்றத்தைத் தடுப்பது மட்டுமே. ஆனால், உழவடை பாத்தியமோ அவர்களுக்கு இழப்பீட்டை உறுதி செய்கிறது.

குத்தகைதாரர்கள் புதிதாகப் பெற்ற இந்த அதிகாரத்தை நிலை நிறுத்துவதில் பிற்படுத்தப்பட்ட சாதியினர் பெற்ற அரசியல் அதிகாரமும், தலித் மக்களின் எதிர்ப்பு அரசியலும் பெரிதும் உதவின. இதன் விளைவாகக் குத்தகையின் அளவு காலப் போக்கில் வெகுவாகக் குறைந்தது. இந்தக் குறைவான குத்தகையைக்கூட அளிக்காவிட்டாலும் குத்தகை தாரரை ‘ஏன்’ என்று கேள்வி எழுப்ப முடியாத சூழல் பிறந்தது. நீதிமன்றம் சென்று உத்தரவு வாங்குவது என்பது மிகவும் காலம் பிடிக்கும் ஒன்று. அப்படியே நில உடைமையாளர் சாதகமான ஒரு தீர்ப்பைப் பெற்றாலும் அதனை நடைமுறைப் படுத்துவது என்பது இயலாத ஒன்று. இதனால் குத்தகைதாரர்கள் கூடுதல் தைரியம் பெற்றார்கள். இச்சூழலைக் கணக்கில்கொண்டுதான் CPI(M) முன்னணித் தலைவர் ஒருவரிடம் இதுகுறித்து எனது களப்பணியின்போது விவாதித்தபோது ‘குத்தகை’ என்பது இப்போது ஒரு பிரச்சினையே அல்ல என்று தெரிவித்தார்.

இப்படியாக அரசியல், வரலாறு மற்றும் சமூகக் காரணிகள் ஒன்றிணைந்து நிலப்பிரபுத்துவத்தைக் காவிரி டெல்டா பகுதிகளில் வீழ்த்தின. குத்தகை என்பது ஒரு பிரச்சினையே இல்லை என்றானது. இதனை ஒரு சிறிய அளவில் சரிபார்க்க எண்ணி மேலத்தஞ்சையிலுள்ள ஒரு கிராமத்தைத் தேர்ந் தெடுத்தேன். இந்தக் கிராமம் முன்காலத்தில் முழுவதும் பார்ப்பன நில உரிமையாளர்களைக் கொண்ட கிராமம். எல்லா நிலமும் அவர்களுக்கே சொந்தமாக இருந்தது. இக்கிராமத்தின் பெயரைப் பேட்டை என வைத்துக் கொள்வோம். பார்ப்பனர்கள் வழக்கம்போல் இரண்டு அக்ரஹாரத் தெருக்களில் தனியாக வசித்தனர். கள்ளர்கள் தனி வீதியில் வசித்தனர். கள்ளர்கள் பார்ப்பனர்களின் குத்தகைதாரர்களாகவோ, காரியக்காரர்களாகவோ இருந்து வந்தனர். பறையர் மற்றும் தேவேந்திர குல வெள்ளாளர்கள் வயல்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகள். இவர்களல்லாது இன்ன பிற சேவை சாதியினரும் வசித்தனர்.

பார்ப்பனர்கள் மற்றவர்களுக்கு முன்பே முறையான கல்வியைப் பெற்று நகர்ப்புற வேலை வாய்ப்புகளைத் தேடிப் புலம்பெயர்ந்தனர். இந்தியா முழுவதும் இவ்வாறு இவர்கள் வேலை தேடிச் சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விட்டனர். குத்தகையை அவர்களே நேரில் பெற்றனர். அல்லது அப் பொறுப்பை ஊரிலேயே இருந்த தங்கள் உறவினர்களிடம் ஒப்படைத்தனர். ஒரு சிலர் தங்கள் நிலங்களைத் தங்களது பண்ணையாட்களிடமே குத்தகைக்கு அடைத்தனர். இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களல்லாது உள்ளூரில் வசித்த பார்ப்பனர்கள் பலரும் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் மட்டும் தங்கள் நிலங்களைப் பண்ணையாட்கள் கொண்டு நேரடியாக விவசாயம் செய்தனர். தஞ்சை மாவட்டத்தின் பல பார்ப்பன கிராமங்களில் நிகழ்ந்ததுபோல் பேட்டையிலிருந்து அனைத்துப் பார்ப்பனர்களும் புலம்பெயரவில்லை. ஒரு சில பெரிய நிலச் சுவான்தார் குடும்பங்களின் உறுப்பினர்கள் பேட்டையிலேயே தங்கிவிட்டனர்.

பேட்டையில் நிலவியது குத்தகை முறை. அதாவது குறிப்பிட்ட அளவு நெல்லோ அல்லது அதற்குண்டான பணமோ வருடா வருடம் நில உடைமையாளருக்குக் குத்தகைதாரர் அளிக்கும் முறை. ஏனெனில், பேட்டை நீர்வளம் குன்றாத பகுதி. இதனால் உற்பத்தியில் ஒரு நிச்சயத்தன்மை இருந்தது. இப்படிப்பட்ட பகுதிகளில் (குறிப்பாகப் பேட்டை போன்ற கிராமங்களில்) நெல் விளைச்சல் கூடுதலாகவும் நிச்சயமாகவும் இருந்து வந்தது. குத்தகைதாரர்கள் அறுவடை முடிந்ததும் குத்தகையைத் தவறாமல் அளந்து வந்தனர் (பார்ப்பனர்களை சாமி என்று அழைத்த காலம் அது). கீழத்தஞ்சையில் வலுப்பெற்ற இடதுசாரி இயக்கம் ஒருபுறம், திராவிடக் கட்சிகளின் பெருகும் பலம் ஆகிய இரண்டும் குத்தகைதாரர்களுக்கு புதிய வலுவைச் சேர்த்தன.

1967இல் திமுக ஆட்சியைப் பிடித்ததும் கள்ளர்கள் மற்றும் தலித்துகளின் மீதான பார்ப்பனர்களின் பிடி தளர்ந்து போனது. குத்தகைதாரர்கள் நிலத்தை மீண்டும் ஒப்படைக்க இழப்பீடு கேட்கத் தொடங்கினார்கள். பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்கத்தை இழக்கத் தொடங்கியதும் அவர்கள் குத்தகைக்கு விட்ட நிலங்களை மீட்பது பெரும் சவாலாக மாறியது. குறிப்பாக வெளியூர் சென்ற பார்ப்பனர்களால் நிலத்தை மீட்பது இயலாமல் போனது. பலரும் தங்கள் நிலங்களைக் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு குத்தகைதாரர்களிடமே விற்றுவிட்டனர். குத்தகைதாரரால் வாங்க முடியவில்லை என்றால் அவர் யாரைக் காட்டுகிறாரோ அவரிடம் அவர் சொன்ன விலைக்கு விற்றுவிட்டு வெளியேறினர். விற்பனைத் தொகையில் பெரும்பகுதி குத்தகைதாரருக்குத்தான் சென்று சேர்ந்தது. பலரும் அக்ரஹாரத்திலிருந்த வீடுகளையும் பிறருக்கு (கள்ளர்கள்) விற்றுவிட்டு பேட்டையை விட்டே சென்றுவிட்டனர். இவ்வாறாகத்தான் முன்னாள் குத்தகைதாரர்களான கள்ளர்களும் தேவேந்திர குல வேளாளர்களும் பேட்டையின் நில உடைமையாளர்களாயினர்.

> பார்ப்பனரல்லாதோர் இயக்கம்,
> பார்ப்பனர்களின் புலம்பெயர்வு,
> கிராமங்களில் அதிகார மாற்றம்,
> திராவிடக் கட்சிகளின் ஆட்சி பலம்
> ஆகிய அனைத்தும் இணைந்தே
> இம்மாற்றத்தை உருவாக்கின.

2016ஆம் ஆண்டு நிலவரப்படி பேட்டையிலிருந்த வேளாண் நிலப்பரப்பில் 62 விழுக்காடு கள்ளர்களிடமும் 22% நிலப்பரப்பு தேவேந்திரர்களிடமும் இருந்தது. மொத்த பரப்பையும் வைத்திருந்த பார்ப்பனர்கள் 2016இல் வெறும் 10% பரப்பையே வைத்திருந்தனர். 1967க்கும் 2016க்கும் இடைப்பட்ட காலத்தில் பேட்டை கிராமத்தில் 786 பதிவுகள் பத்திரப் பதிவு அலுவலகத்தில் பதியப்பட்டுள்ளன. ஏறத்தாழ 571 ஏக்கர் நிலம் விற்று வாங்கப்பட்டுள்ளது.

பார்ப்பனர்கள் இக்கால கட்டத்தில் வாங்கிய நிலங்களை விட 197 ஏக்கர் நிலம் கூடுதலாக விற்றுள்ளனர். இதற்கு நேர் மாறாக, கள்ளர்கள் தாங்கள் விற்ற நிலத்தைவிட 140 ஏக்கர் நிலம் கூடுதலாக வாங்கியுள்ளனர். தேவேந்திரர்கள் கூடுதலாக வாங்கியது 53 ஏக்கர் நிலமாகும். விற்று வாங்கிய மொத்த எண்ணிக்கையில் 70% எண்ணிக்கைகள் சந்தை முறைப்படி விற்று வாங்கப்பட்டவையாகும். 30% எண்ணிக்கைகள் (விற்று வாங்கியவை) நில உடைமையாளருக்கும் குத்தகைதாரருக்கும் இடையே நடைபெற்றவையாகும். பார்ப்பனர்கள் சம்பந்தப்பட்ட விற்பனையில் 45% விற்பனைகள் குத்தகைதாரர்களுக்கும் அவர்களுக்குமிடையே நிகழ்ந்தவை. சந்தை சார்ந்த விற்று வாங்குதலில் அவர்களால் 55% பரிவர்த்தனைகளையே (transactions) மேற்கொள்ள முடிந்தது. கள்ளர்கள் மற்றும் தேவேந்திரர்களைப் பொறுத்தவரை முறையே 91%, 83% பரிவர்த்தனைகள் சந்தை சார்ந்த பரிவர்த்தனைகள்.

நிலப்பரப்பை எடுத்துக்கொண்டால் பார்ப்பனர்கள் தாங்கள் விற்ற நிலப்பரப்பில் ஒரு பாதி அளவிற்கே சந்தை விலையில் விற்க முடிந்திருக்கிறது. மற்ற பாதியை தங்கள் குத்தகைதாரர்களுக்கு விற்றிருக்கிறார்கள். ஆனால், கள்ளர்களும் தேவேந்திரர்களும் தாங்கள் விற்ற நிலத்தில் பெரும் பகுதியைச் சந்தை விலைக்கே விற்றிருக்கிறார்கள். அனைத்து விற்று வாங்கிய பரிவர்த்தனைகளைக் கணக்கில் கொண்டால், நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி குத்தகை சார்ந்து விற்று வாங்கியதாகும். இந்த நில உடைமை மாற்றம் 1975க்கும் 1995க்கும் இடையே பெரும் எண்ணிக்கையில் நடைபெற்றுள்ளது.

பேட்டை கிராமத்திற்கான குத்தகைதாரர் பதிவேடு 131 குத்தகைதாரர்களைக் கொண்டுள்ளது. குத்தகை நிலப்பரப்பு (பதிவு பெற்றது) 157.41 ஏக்கர்களாகும் (1971இல்). குத்தகைக்கு விடப்பட்ட நிலப்பரப்பில் முக்கால் பகுதி பரப்பு பார்ப்பனர்களுக்குச் சொந்தமானது. மீதமுள்ள கால் பகுதி கோயில் நிலங்களாகும். குத்தகைதாரர்களில் 60 விழுக்காட்டினர் கள்ளர்கள். தேவேந்திரர்கள் 30 விழுக்காடு. நிலப்பரப்பில் 57% குத்தகை நிலம் கள்ளர்கள் வசமிருந்தது. தேவேந்திரர்கள் குத்தகைக்கு விடப்பட்ட நிலப்பரப்பில் நான்கில் ஒன்றை வைத்திருந்தனர். பார்ப்பனர்கள் 10% நிலத்தை (குத்தகைக்கு விடப்பட்டிருந்த மொத்த பரப்பில்) குத்தகைக்கு வைத்திருந்தனர்.

1971இல் குத்தகைக்கு விடப்பட்டுப் பதியப்பட்டிருந்த நிலம் அனைத்தும், 2016இல் குத்தகைதாரர்கள் வசம் சென்று சேர்ந்திருந்தது. இதற்கு விதிவிலக்கு குத்தகைக்கு விடப்பட்ட கோயில் நிலங்கள் மட்டுமே.

அரசு இயற்றிய சட்டங்கள், விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும் முன்னெடுத்த போராட்டங்கள், பார்ப்பனரல்லாதோர் இயக்கம், பார்ப்பனர்களின் புலம்பெயர்வு, கிராமங்களில் அதிகார மாற்றம், திராவிடக் கட்சிகளின் ஆட்சி பலம் ஆகிய அனைத்தும் இணைந்தே இம்மாற்றத்தை உருவாக்கின. அரசின் சட்டங்களால் மட்டும் இம்மாற்றங்கள் நிகழாது போயிருக்கலாம். சட்டம் மட்டுமே மாற்றத்தை விதைத்துவிடும் என நம்புவது சரியான அணுகுமுறையல்ல. ஏனெனில், இத்தகைய அணுகுமுறை அடிமட்டத்திலிருந்து கிளர்ந்து எழும் சமுதாய அரசியல் இயக்கங்களின் பங்களிப்பை உள்வாங்கத் தவறுகிறது.

இத்தகைய எழுச்சிமிகு சமுதாய அரசியல் இயக்கங்களின் செயல்பாட்டோடு சட்டமும் இணையும்போது பலராலும் அங்கீகரிக்கப்படத் தக்க சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி உண்மையான (de facto) ஒரு சமுதாயக் கட்டளைச் சட்டம் (norm) உருவாகிறது. அதுமட்டுமல்ல, இத்தகைய கட்டளைச் சட்டம் பரவலாக ஏற்றுக்கொள்ளும் சூழலும் உருவாகிறது. போட்டி அரசியல் கட்சிகளுக்கிடையே நிலவும் சூழலோடு இந்தக் கட்டளைச் சட்டம் இணையும்போது வியத்தகு முடிவுகள் பிறக்கின்றன. ஓர் அரசியல் அமைப்பு உரிமைகளுக்காகப் போராடும் அதே சமயத்தில் மற்றோர் அமைப்பு வலிமையான சட்டங்களை இயற்றுகிறது. இப்படிப்பட்ட சட்டங்களை இயற்றுவதன் வாயிலாக உரிமைக்குப் போராடும் அமைப்பின் உறுப்பினர்களை மற்ற அமைப்பு கவர்கிறது.

இந்த மாற்றம் பிற்படுத்தப்பட்டோருக்குப் பயனளித்த அளவிற்கு தலித்துகளுக்குப் பயனளிக்கவில்லைதான். அதிகார அமைப்பு மாறிய சூழலில் நடைபெறும் பேரங்களின்போது மேலாதிக்கத்தில் உள்ள சக்தி இந்தப் பேரத்தின் போக்கையும் முடிவையும் தீர்மானிக்கின்றன. திராவிட இயக்கத்தின் விளைவாகத் தலித்துகளும், கள்ளர்களும் பார்ப்பன மேலாதிக்கத்தை எதிர்க்க முடிந்தது. தலித்துகள் தங்கள் உறுதியான செயல்பாடுகளால் கள்ளர்களின் அதிகாரத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். கள்ளர்கள் முன்பு பெருமளவில் குத்தகைதாரர்களாக இருந்ததால் இந்த மாற்றத்தில் அவர்கள் நிலத்தைக் கூடுதலாகப் பெற்றுள்ளனர். இப்படியாக, சட்டம் மட்டுமே செய்து முடிக்க முடியாத ஒன்றை, சமூக அரசியல் செயல்பாடுகளினால் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. ●

# மாநாட்டுக் காட்சிகள்









சங்கரன்கோயில் பயணக்குழு



மேட்டூர் பயணக்குழு



மயிலாடுதுறை பயணக்குழு



சென்னை பயணக்குழு



திருப்பூர் பயணக்குழு



குடியாத்தம் பயணக்குழு

## அனிதா இல்லத்தில் சென்னை பயணக் குழுவினர்



சென்னை பரப்புரைக் குழுவினர் அரியலூர் மாவட்டம் குழுமூரில் உள்ள அனிதா இல்லத்துக்கு 25.8.2018 மாலை 4 மணியளவில் சென்றனர். அனிதாவின் சகோதரர் மணிரத்தினம் அனைவரையும் வரவேற்றார். அனிதா இல்லத்துக்கு அருகே புதிதாகத் திறக்கப்பட இருக்கும் அனிதா நினைவு நூலகக் கட்டிடத்துக்கு சென்றனர். அங்கே ‘நீட்’ தேர்வை ஒழித்து, அனிதாவின் கனவை நனவாக்குவோம் என்று உறுதி ஏற்றனர். கழக வெளியீடுகளை நூலகத்துக்கு வழங்கி தோழர்கள் விடைபெற்றுத் திரும்பினர்.




“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம் ரூ.200

தொடர்புக்கு:

ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

9841489896 newsdvk@gmail.com

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழக மாநாடு தமிழக அரசுக்கு கோரிக்கை

# ‘நீட்’டுக்கு விலக்கு கோரி – தமிழக சட்டமன்றத்தில் மீண்டும் தீர்மானம்

2018 ஆகஸ்ட் 26 அன்று பெரம்பலூரில் நிகழ்ந்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் தமிழர் கல்வி உரிமை மீட்புப் பரப்புரைப் பயணத்தின் நிறைவு விழா மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்த தீர்மானங்கள்:

**கலைருக்கு வீர வணக்கம்**

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவரும், சூத்திரர் இழிவு ஒழிப்பு இலட்சியத்தை நிறை வேற்றிட அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்க - இரண்டு முறை - தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் மற்றும் சட்டம் நிறைவேற்றியவரும், திராவிட இயக்கத்தின் அடிப்படையான சமூக நீதிக் கொள்கைகளைக் கட்டிக் காப்பாற்றி விரிவு செய்து - மேலும் செழுமையாக்கி இட ஒதுக்கீட்டுத் தத்துவத்தை ஜன நாயகப்படுத்தியவரும், சூத்திரர்களுக்கான ஆட்சியை நடத்துகிறேன் என்று சட்டப் பேரவையில் முதல்வராகப் பிரகடனம் செய்தவரும், தை முதல் நாளே தமிழர்களுக்கான புத்தாண்டு என்று பார்ப்பனியத்திற்கு எதிரான பண்பாட்டுப் புரட்சியை சட்டப் படி நடைமுறைக்குக் கொண்டு வந்தவரும், ‘சிலை வைக்க வேண்டிய தலைவர்’ என்று பெரியாரால் போற்றப்பட்டவருமான திராவிட அரசியலின் மூத்த தலைவர் கலைஞர் மறைவுக்கு இம்மாநாடு வீர வணக்கம் செலுத்திறது.

தமிழ்நாட்டில் திராவிட அரசியலுக்கான ஒரே வலிமையான இயக்கமாகத் திகழும் திராவிட முன்னேற்றக் கழகத்தை பலவீனப்படுத்தி திராவிட இயக்க அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்று பார்ப்பனர்கள் முனைப்போடு நடத்தும் திரை மறைவு சூழ்ச்சிகளை தமிழர்கள் புரிந்து கொண்டு அதை முறியடிக்க முன் வரவேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

**மீண்டும் சட்டசபை தீர்மானம்**

தமிழ்நாட்டின் கிராமப்புற ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சியில் பேரிடியாக தாக்கிக் கொண்டிருக்கும் ‘நீட்’ தேர்வை நடுவண் ஆட்சி தமிழக மக்கள் மீது தொடர்ந்து திணித்து வருவதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டுக்கு விதிவிலக்குக் கோரி தமிழக சட்டமன்றம் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானத்தை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குக்கூட நடுவணரசு அனுப்பி வைத்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு சிறப்பு சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் ‘நீட்’ தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விதிவிலக்குக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி நடுவண் அரசுக்கு அழுததம் தரவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**வடவர் திணிப்பு**

தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்களிலும், தொடர் வண்டித் துறைகளிலும் தமிழ் தெரியாத வடநாட்டுக்காரர்கள் அதிகாரிகளாக, அரசு ஊழியர்களாக பணியமர்த்தப்பட்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நடுவண் அரசுத் துறைகளிலும் தமிழ் தெரிந்த தமிழ்நாட்டுக்காரர்களையே நியமிக்க வேண்டும்.

மத்திய தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளை கடந்த சில ஆண்டுகளாக இந்திய அளவில் இந்தியிலும், ஆங்கி லத்திலும் மட்டும் நடத்துவதைக் கைவிட்டு, மாநில அளவில், மாநில மொழிகளில் நடத்த வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது. கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிரான இந்த வடவர் திணிப்பு நடவடிக்கை களை தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு நடுவணரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என இம்மாநாடு எச்சரிக்கிறது.

**புதிய வேலை வாய்ப்புகள்**

தமிழ்நாட்டில் பல இலட்சம் இளைஞர்கள் படித்து வேலை வாய்ப்பு இன்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்கால வாழ்க்கைக்கு எந்த உறுதியும் இல்லாத நிலையில் சமூகத்தில் படித்த இளைஞர்கள் பலர் ‘கிரிமினல்’ குற்றங்களில் ஈடுபட வைக்கும் நிலைக்கு சமூக நெருக்கடிகள் உருவாகி வருவதைக் கவனத்தில் கெண்டு புதிய வேலை வாய்ப்புக்கான திட்டங்களை உருவாக்க தமிழக அரசு முன்வர வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் அரசு வேலைவாய்ப்புக்கான தேர்வுகளை தமிழ் தெரியாதவர்களும், பிற மாநிலத்தவர்களும் நேபாளம், பூடான் போன்ற வெளிநாட்டுக்காரர்களும் எழுதலாம் என்று அறிவித்து அதனடிப்படையில் தேர்வுகள் நடத்துவதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அரசின் இந்த விபரீத அரசாணையைத் திரும்பப் பெற வேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**இந்து இராஷ்டிரம் அமைக்கும் சதி**

1956ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்த பல்கலைக்கழக மானியக் குழுவைக் கலைப்பது; இந்திய மருத்துவக் கவுன்சிலுக்கு மாற்றாக மருத்துவ ஆணையத்தை உருவாக்கு வது போன்ற நடுவண் ஆட்சியின் திட்டங்கள் மாநிலங்களின் கல்வி உரிமைகளை முற்றாக ஒழிப்பதாகும். ஒரே தேசம், ஒரே வரி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி என்ற நோக்கில் நடுவண் ஆட்சி அதிரடியான திட்டங்களையும் சட்டங்களையும் கொண்டு வருவது இந்தியாவை இந்து இராஷ்டிரமாக்கி விடும் மறைமுக செயல் திட்டமே யாகும்.

வர்ணாஸ்ரமத்தை உறுதிப் படுத்தும் இந்து இராஷ்டிர முயற்சிகளை முறியடித்து தமிழர்களின் ஜாதியற்ற, பால் இன பாகுபாடுகளை மறுக்கும் சமத்துவ சமூக நீதிப் பண்பாட்டை முன்னெடுக்க தமிழர்கள் தயாராக வேண்டும்; அதற்கான மக்கள் கருத்துக்களை சமூக வலை தளங்கள் வழியாக முன்னெடுக்க இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று இம்மாநாடு இளைய தலைமுறைக்கு அறைகூவல் விடுக்கிறது.

(முதல்பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு நாளும் உண்டியலில் சேர்த்த தொகையை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கழக வளர்ச்சிக்கு பலத்த கரவொலிக்கிடையே வழங்கினார். தொடர்ந்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால்பிரபாகரன் பேசினார். நேரத்தின் நெருக்கடியால் கழகப் பொறுப் பாளர்கள் பேச இயலவில்லை. கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருந்தனர்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தனது சுருக்கமான உரையில், “இந்தியாவிலேயே தமிழ்நாடு தனித்துவம் பெற்று நிற்பதற்கான அடித்தளம் இங்கே பெரியாரும் திராவிடர் இயக்கமும் ஊட்டி வளர்த்த சமூக நீதி எனும் புரட்சிகரப் பண்பாடுதான், தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் சமூகத்தின் அது கடைகோடியில் உழலும் மக்களாக இருந்தாலும் கூட தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்பதற்கே முன்னுரிமை தருகிற நிலையை உருவாக்கியது பெரியார் கண்ட திராவிட இயக்கம். கல்வியை வெகு மக்களுக்கு மறுத்த மனுதர்ம பார்ப்பனப் பண்பாட்டுக்கு எதிராக தமிழ்நாட்டில் நிலைநிறுத்தப்பட்ட கல்வி, வேலைவாய்ப்புக்கான சமூகநீதிப் பண்பாட்டின் வெளிப்பாடுதான் பயணக் குழுவினருக்கு கிடைத்த மக்களின் பேராதரவு” என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து மாநாட்டுத் தீர்மானங்களைமுன்மொழிந்தார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. சமூக நீதியை பரவலாக தமிழ்நாட்டில் கலைஞர் நடைமுறைப் படுத்திய தொடர் செயல்பாடுகளையும் ‘நீட்’ தேர்வு தகுதிக்கான தேர்வு என்று சொல்லப்படுகிற வாதங்ககளில் புரட்டுகளையும் விளங்கியதோடு தமிழகத்தில் கட்டி எழுப்பப்பட்ட மருத்துவ சேவையை நீட் குலைத்து வருவதை விளக்கினார்.

திருச்சி மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் டார்வின் தாசன் நன்றி கூறினார். பயணக் குழுவினர் கழகப் பொறுப்பாளர்களோடு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். குழுவில் பங்கேற்ற தோழர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆகஸ்டு 20இல் தொடங்கி கொளுத்தும் வெயிலில் கிராமங்களில் சிறு நகரங்களில் ‘நீட்’ ஆபத்து; தமிழக வேலை வாய்ப்புகளை வடவருக்குத் தாரை வார்க்கும் மத்திய மாநில அரசுகளின் உரிமை பறிப்பு கொள்கைகளை விளக்கிப் பேசினர். கழகத் தோழர்களே பேச்சாளர்களாக இந்தப் பயணத்தில் பங்காற்றியது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். கொள்கைக் குடும்பமாக 7 நாள் ஒன்றாகப் பயணித்த தோழர்கள் கொள்கைகளையும் உறவுகளையும் மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டு பெரம்பலூரிலிருந்து பிரியா விடை பெற்றனர்.

**– நமது செய்தியாளர்**

## கழக வளர்ச்சிக்கு ரூ. 25,000 நன்கொடை: கோபி இராம இளங்கோவன்–க.ம. நாத்திகராணி புதிய இல்லம் திறப்பு



கழக வெளியீட்டு செயலாளர் கோபி இராம இளங்கோவன், க.ம. நாத்திக ராணி இணையரின் புதிய பெரியார் இல்லத் திறப்பு விழா, ஆகஸ்ட் 11ஆம் தேதி பகல் 12 மணியளவில் கொளப் பலூரில் சிறப்புடன் நிகழ்ந்தது. தா.செ. பழனிச்சாமி, கோ. இராமகிருஷ்ணன் ஆகியோர் புதிய இல்லத்தைத் திறந்து வைத்தனர். நிகழ்வையொட்டி மதுரை வேம்பனின் தந்திரவியல் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் ஆசைத்தம்பி வரவேற்புரையைத் தொடர்ந்து கோபி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.பா. வெங்கிடு, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர். இல்லத் திறப்பு விழா மகிழ்வாக கோபி. இளங்கோ கழக வளர்ச்சிக்கு ரூ.25,000 பொதுச் செயலாளரிடம் வழங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கழகத் தோழர்கள் பெருமளவில் நிகழ்வில் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 30th August 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN